# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

# 5



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

# இதுவரை இரகசியமாயுள்ள அந்த ஏழு இடிகள் தான் அவளை மறுபடியுமாக எழுப்பும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: மூன்றாம் முத்திரை, மார்ச்சு, 26, 1963 மாலை

*183. மணவாட்டிக்கும் உண்மையாக எழுப்புதல் இன்னும் நிகழவில்லை. பாருங்கள்? அவளுடைய உணர்ச்சியைத் தூண்டுவதற்குத் தேவனுடைய தோற்றம் இன்னும் வரவில்லை. பாருங்கள்? இதை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.* **இதுவரை இரகசியமாயுள்ள அந்த ஏழு இடிகள் தான் அவளை மறுபடியுமாக எழுப்பும்.** *பாருங்கள், ஆம்.* **அவர் அதை அனுப்புவார். அவர் அதை அனுப்புவதாக வாக்களித்துள்ளார்.** *இப்பொழுது கவனியுங்கள்.*

**இந்த புறஜாதிகளுக்கான செய்தியானது முதலில் புறஜாதிகளண்டைக்கு யூதர்கள் தான் கொண்டு வந்ததாகும். புறஜாதிகள் அதை மீண்டும் யூதர்களிடம் எடுத்துச் செல்வார்கள்; எடுத்துக் கொள்ளப்படுதல் அப்பொழுது வரும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-1204M - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்

300 சகரியா, சகரியா, இப்பொழுது சகரியா 12-ம் அதிகாரம். நாம் இப்பொழுது இதை உண்மையாகவே ஜெபத்தோடு எடுத்துப் பார்க்க விரும்புகிறோம். நான் தேவனுடைய மகிமைக்காக இதை எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது சகரியா 12-ம் அதிகாரம் 9-ம் வசனத்தை எடுப்போம். சகரியா 12-ம் அதிகாரம் நாம் 9-ம் வசனத்திலிருந்து துவங்குவோம். இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள். இங்கே வருகையைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறார். சகரியா 12, நாம் 9-வது, 9-வது வசனத்தில் துவங்குவோம்.

*...அந்நாளிலே...*

சகரியா கிறிஸ்துவின் வருகைக்கு 487 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தத் தீர்க்க தரிசனத்தை உரைக்கிறான்.

*அந்நாளிலே எருசலேமுக்கு விரோத மாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்.* (அதைக் குறித்து எண்ணிப் பாருங்கள்.)

*நான் தாவீதின் குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவி யையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர் கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து,...*

301 இப்பொழுது, எப்பொழுது சுவிசேஷமானது யூதர்களுக்குத் திரும்பிச் செல்கின்றது?

புறஜாதிகளின் காலம் முடிவடைந்த பிறகு, சுவிசேஷம் யூதருக்கு செல்ல ஆயத்தமாயிருக்கும்.

ஓ, இங்கே இந்த நாளில் தானே, நடைபெறப் போகிற ஒரு காரியத்தை நான் உங்களுக்கு முன்னுரைக்க முடிந்தால் நலமாயிருக்கும், பாருங்கள், உங்களுக்குப் புரிகிறதா? அது நடைபெற இருக்கிறது. நாம் அதை சபைக் காலத்தில் பார்ப்போம். சம்பவிக்க ஆயத்தமாயிருக்கிற இந்த மகத்தான காரியம், வெளிப்படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரத்திலுள்ள அவ்விரு தீர்க்கதரிசிகளாகிய எலியா, மோசே ஆகியோரை யூதர்களுக்காக திரும்பக் கொண்டு வருகிறது. நாம் அதற் காக ஆயத்தமாயிருக்கிறோம். எல்லாமே கிரமமாக ஆயத்தமாக இருக்கிறது.

**இந்த புறஜாதிகளுக்கான செய்தியானது முதலில் புறஜாதிகளண்டைக்கு யூதர்கள்**

**தான் கொண்டு வந்ததாகும். புறஜாதிகள் அதை மீண்டும் யூதர்களிடம் எடுத்துச் செல்வார்கள்; எடுத்துக் கொள்ளப்படுதல் அப்பொழுது வரும்.**

302 இப்பொழுது உபத்திரவ காலத் திற்கு பிறகு உள்ள...இந்த வருகையைப் பற்றி மனதில் வையுங்கள். உபத்திரவ காலத்திற்குள் சபையானது போவதில்லை. நாம் அதை அறிவோம். வேதம் அவ் வாறே கூறுகிறது. புரிகிறதா? சரி.

303 இப்பொழுது, இஸ்ரவேல் வீட்டார் மேல் அவர் ஊற்றுவார், (எதை?) அதே பரிசுத்த ஆவியைத் தான் ஊற்றுவார். பாருங்கள், புறஜாதி சபை சென்றுவிட்ட பிறகே.

*...அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப்*

*புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளியக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.*

*அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிமோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும்.*

*தேசம் புலம்பிக்கொண்டிருக்கும்; ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும்; தாவீது குடும்பத்தார் தனியேயும்,…நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும்; அவர்கள் நோக்கிப் பார்க்கையில் என்ன சம்பவிக்கும்? அவருடைய இரண்டாம் பிரசன்னமாகுதலில் மகிமையின் மேகங்களுடன் அவர் வரும்போது, என்ன சம்பவிக்கும்?*

304 அவரைக் குத்தின அந்த யூதர்கள்…உங்களுக்குத் தெரியும், இன்னொரு

வேத வாக்கியத்தில் அவர்கள் அவரிடத்தில், அவர் இந்த வடுக்களை எங்கே பெற்றுக் கொண்டார் என்று கேட்டார்கள் என்று கூறுகிறது.

அவரோ "என் சிநேகிதரின் வீட்டில்" என்று கூறுவார்.

305 அவரை மேசியாவாக ஏற்றுக் கொள்ளாத யூதருக்கு மட்டும் அது ஒரு புலம்பலின் வேளையாக இருக்காது. இந்த நாளுக்கென உள்ள மேசியாவாக அவரை ஏற்றுக் கொள்ளாமல், கைவிடப்பட்ட புறஜாதியாருக்கும் அது ஒரு புலம்பும் வேளையாயிருக்கும். அவர்கள் அழுது புலம்புவார்கள். உறங்கும் கன்னிகைகள் புலம்புவர். அதுவே தன்னுடைய தீவட்டிக்கு எண்ணெய்யைப் பெற்றுக் கொள்ள மறுத்த சபையாகும். அங்கே பத்து கன்னிகைகள் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அனைவருமே நல்ல ஜனங்கள் தான்,

ஆனால் அவர்களில் ஐந்து பேருக்கு மட்டுமே தங்கள் விளக்குகளில் எண்ணெய் இருந்தது. நல்ல ஜனங்களாய், நல்லவர்களாயிருந்த மற்ற ஐந்து பேர்களும், தங்கள் விளக்குகளில் எண்ணெயைப் பெற்றுக் கொள்ளத் தவறிவிட்டார்கள். "அவர்கள் புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள்; அங்கே அவர்களுக்கு அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்."

306 இங்கோ அது, "அவர்கள் அழுது புலம்புவார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது. வேதாகமம், "அவர்கள் இருதயம் நொறுங்குண்டு அழுது புலம்புவார்கள்" என்று இங்கே கூறியுள்ளது.

## 60-1204M - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்

Rev. William Marrion Branham

**யூதர்கள் புறஜாதிகளுக்கு செய்தியை கொடுத்தது போல, என்றாவது ஒரு நாளில் புறஜாதி சபையும் யூதர்களுக்கு செய்தியை கொண்டு செல்லும் என்று நான் விசுவாசிக்கிறேன்.**

**எனவே அதுதாமே யூதர்களுக்கு முழுமையாக சென்றடையும் போது, கவனியுங்கள்; புறஜாதி கதவானது மூடப் பட்டு, அது யூதர்களுடையதாயிருக்கும்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-21M ஜீவ மார்க்கம்

1. நன்றி, சகோ. பார்டஸ் (Borders). உங்களுக்கு தெரியும், மக்கள் மத்தியில் இருப்பது அது அருமையான சிலாக்கிய மாய் இருக்கிறது. மேலும் முதல் முறை யாக யூத ஜெப வீட்டில் (Synagogue) இருப்பது, அது எனக்கு கிடைத்த அரிய வாய்ப்பாக இருக்கிறது. இந்த சுருள்களின் ஒழுங்கு முறைகளையும் எப்படியாக அவை பாதுகாக்கப்படுகிறதென்றும், இன்னும் அநேக காரியங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இங்கு வந்து இந்த தேவாலயத்தில் யூதர்களோடு ஒரு சுகமளிக்கும் ஆராதனையை நடத்து வது ஒரு அருமையான நேரமாயிருக்கும். நன்றி சகோதரனே, மிக்க நன்றி.

நான் எப்பொழுதும் யூத மக்களைக் குறித்து ஒரு உணர்வை பெற்றவனாயிருக் கிறேன். ஒருவேளை இக்காலையில் இங்கு யாரும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர்களைக் குறித்ததான உணர்வு எனக்கு எப்பொழுதும் உண்டு.

**யூதர்கள் புறஜாதிகளுக்கு செய்தியை கொடுத்தது போல, என்றாவது ஒரு நாளில் புறஜாதி சபையும் யூதர்களுக்கு செய்தியை கொண்டு செல்லும் என்று நான் விசுவா சிக்கிறேன்.**

**எனவே அதுதாமே யூதர்களுக்கு முழுமையாக சென்றடையும் போது, கவனியுங்கள்; புறஜாதி கதவானது மூடப் பட்டு, அது யூதர்களுடையதாயிருக்கும்.**

ஆகவே இப்பொழுது இதுதாமே நேரமாயிருக்கிறது. இப்பொழுது இங்கே உள்ளே இருப்பதில் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

# அந்த நேரம் வரும்போது மிக மிக சொற்பமானவர்கள் மட்டுமே ஆயத்தமாய் இருப்பார்கள் என்று எங்களுக்கு எச்சரித்திருக்கிறீர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-1119 பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

145. ஒரே ஒரு காரியம் விடப்பட்டிருக்கிறதை நான் காண்கிறேன் பிதாவே. அது, சில வெறும் பாத்திரங்களை நீர் எங்காவது எழுப்பி இந்த உலகம் தன்னைக் குறித்து அவமானப்படச் செய்யும் அல்லது இயேசு கிறிஸ்துவின் வருகையை துரிதமாக்கும் என்பதே.

இரண்டு காரியம் விடப்பட்டிருக்கிறது கர்த்தாவே, நாங்கள் அதை இப்பொழுதே பார்த்தாக வேண்டும். ஏனெனில் இது கடைசி காலம் என்பதை நாங்கள் அறிகிறோம்.

ஒன்று, இப்பொழுதே வல்லமையான ஒன்று எழும்புவதைக் காணச் செய்யும் அல்லது கர்த்தரின் வருகையை நாங்கள் காணச் செய்யும்.

எல்லா தீர்க்கதரிசனங்களும் நிறை வேறிவிட்டன. சபை உயிர்த்தெழுவதற்கு முன்பு வெளிப்படுத்தின விசேஷம்: 3-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டபடி சபை எடுக்கப்படும் முன்பு, லவோதிக்கேயா சபைக்கு ஒரு தூதன் அனுப்பப்பட்டு, பிள்ளைகளின் இருதயத்தை அவர்கள் முற்கால பிதாக்களிடத்திற்குத் திருப்பும் ஊழியமானது அவர்களை பெந்தெ கொஸ்தேயின் அனுபவத்திற்குள் கொண் டுச் செல்லும்.

**நோவாவின் நாட்களில் நடந்தது போல ஆயிரமாயிரமான ஆத்துமாக்கள் இழக்கப் பட்டு போவார்கள். கர்த்தாவே அனேகர்**

**இழக்கப்படுவார்கள்.** பிதாவே அது ஏற்கனவே நிறைவேறிவிட்டது என்பதை காண்கிறோம்.

146. கர்த்தராகிய இயேசுவே உம்முடைய சபையை எடுத்துக் கொள்ள வாரும்.

**உமக்கு சித்தமானால் கர்த்தாவே, சபை எடுக்கப்படுவதற்கு சற்று முன்பதாக உம்முடைய வல்லமையை எழுப்பட்டும்.**

**ஓ, தேவனே, இந்த பாத்திரங்களை நிரப்பும், எழுப்பும் கர்த்தாவே.**

**இந்த உலகத்தை இன்னும் ஒரு விசை அசையும் !**

**காலம் கடந்துவிட்டது என்று எங்களுக்குத் தெரியும். இனி மனந்திரும்புதல் இருக்காது. அப்படியானால் இது அவர்களுக்கு மிகவும் காலம் கடந்துவிட்டதாயிருக்கும்.**

**ஆனால் கர்த்தாவே உம்முடைய வல்லமையை காண்பியும். இந்த பாத்திரங்களை நிரப்பி முன்பு ஒருபோதும் இருந்திரா வண்ணம் இந்த உலகை அசையும் !**

**அதன் பின்பு உம்முடைய சபையை எடுத்துக் கொண்டு இந்த உலகை அழிவிற்கு விட்டுவிடும். ஓ, தேவனே, அவர்கள் தத்தளிப்பார்கள்.**

அதன் பின்பு மகத்தான பரிசுத்த ஆவியானவர் யூதர்களிடம் வருவார் என்று நாங்கள் அறிந்திருக்கிறோம். 1,44,000 பேர் ஆட்டுக்குட்டியானவருடன் சீனாய் மலையின் மேல் நிற்பதை காண முடிகிறது. அச்சமயம் மணவாட்டி பரலோகத்தில் இருப்பாள். ஆட்டுக் குட்டியானவர் திரும்பவும் வந்து (யோசேப்பு) தம்முடைய ஜனங்களுக்கு தம்மை தெரியப் படுத்துகிறார். அந்நாட்களில் அவர் அங்கு

நிற்கும்போது அங்கு அவர்கள் மத்தியில் ஒரு புலம்பல் உண்டாயிருக்கும் என்று வேதம் கூறுகிறது. அவர் தம்மை தெரியப்படுத்தும் போது அவர்கள், “உம் கையில் இருக்கும் இந்த வடுக்கள் ஏது?” என்று கேட்பார்கள். அதற்கு அவர், “என் சிநேகிதனின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்” என்பார், என்று வேதம் கூறுகிறது. அப்பொழுது அவர்கள், “இவ ரைத்தான் நாம் சிலுவையிலறைந்தோம்” என்பார்கள். யோசேப்பு கூறியது போன்று அவரும், “கவலைக் கொள்ளாதீர்கள், ஏனெனில் புறஜாதியாரின் ஜீவனைக் காப்பதற்காக தேவன் இதை செய்தார். இது உங்களுடைய தப்பிதமல்ல” என்று கூறுவார். அதன் பின்பு ஒருவன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல அழுது

புலம்புவார்கள். வம்சம், வம்சமாக புலம்புவார்கள்.

147. ஓ, பிதாவே, அந்த நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் 70 வாரங்களின் முடிவாயிருக்கிறது. நேரம் வெகு விரைவிலிருக்கிறது, கர்த்தாவே.

**ஓ, தேவனே, நவநாகரீக சபை வேத சாஸ்திரம் என்னப்பட்ட இந்த நவநாகரீக ஸ்திரீக்கு விரோதமாக உண்மையான தீர்க்க தரிசிகளின் சத்தம் கூக்குரலிட்டும்... சத்தி யத்தைக் கூற பயப்படும், இந்த பிரசங்கி களை அசையும் ஓ தேவனே, இதுவரை இருந்திராவண்ணம் இந்த மனிதர்களை எடுத்து அசைத்து தங்களைக் குறித்து அவமானமடையச் செய்யும்.**

ஆனால் ஒரு காரியத்தை அறிந்திருக் கிறோம். அதின் மேல் நாங்கள் இளைப் பாறி முழு நம்பிக்கையாயிருக்கிறோம்.

அது, "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்பதே (யோ: 6:44). நீர் எந்த அளவிற்கு நெருங்க வேண்டுமென்று விரும்புகிறீரோ அந்த அளவிற்கு அவர்கள் நெருங்குவார்கள்.

**ஆனால், "பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு இராஜ்ஜியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக். 12:32) என்று கூறினார். அது உண்மையென்று நாங்கள் அறிவோம்.**

**அந்த நேரம் வரும்போது மிக மிக சொற்பமானவர்கள் மட்டுமே ஆயத்தமாய் இருப்பார்கள் என்று எங்களுக்கு எச்சரித்திருக்கிறீர்.**

பின்பு எல்லாக் காலங்களிலும் மீட்கப் பட்டவர்கள் - உயிர்த்தெழுந்து வருவார் கள் என அறிகிறோம்.

ஆகவே பிதாவே, இவைகளை நாங் கள் பார்த்து, இந்நாட்களின் செய்தியையும் காண்கிறோம். இன்றுள்ள புறக்கணித்தலை யும் ஒத்துழையாமையும் நாங்கள் காண்கி றோம்.

**உம்முடைய ஜனங்கள் தங்களை, "ஒன்றுமில்லை" என்று அறிக்கையிடுவதை காண்கிறோம்.**

**கர்த்தாவே, அவர்கள் உம்மால் நிரப்பப்பட விரும்புகிறார்கள். அவர்களைக் கொண்டு கர்த்தர் வருவதற்கு சற்று முன்பு இந்த உலகத்தை அசையும் என்று ஜெபிக் கிறேன்.**


ஒரு பழைய
வயலின்
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: தேவன் திரைநீக்கப்படுதல், 64-06-14M

176. இதைக் கூறி முடித்து விடுகிறேன். ஏனெனில் பன்னிரண்டு மணிக்கு ஐந்து நிமிடம் ஆகிவிட்டது, இதைக் கூறி விடுகிறேன். இன்னும் பத்து பன்னிரண்டு பக்கங்கள் உள்ளன. மற்றொரு சமயம் அதை பார்க்கலாம், ஒருக்கால் இன்றிரவு.

கவனியுங்கள், இதை கவனியுங்கள். ஒருமுறை ஒரு பழைய வயலின் ஏலத்துக்கு விடப்பட்டது. இதை நீங்கள் பலமுறை கேட்டிருக்கிறீர்கள் - பழைய வயலின். ஏலம் விடுபவன், "இதற்கு எவ்வளவு கொடுப்பீர்கள்?" என்று கேட்டான். இதை நான் ஒருக்கால் கவிதையின்படி சரியாக கூறாமல் இருக்கலாம், இதை கூறி அநேக ஆண்டுகள் ஆகிவிட்டன, இது என்

நினைவுக்கு வந்தது. அவர்கள் அந்த பழைய வயலினைக் கையிலெடுத்துப் பார்த்தார்கள். காண்பதற்கு அது நன்றாக இல்லை, அது அழுக்கு படிந்ததாயிருந்தது. ஏலக்காரனுக்கு விலை கேட்பவர் எவருமே யில்லை. முடிவில் யாரோ ஒருவர் ஒரு டாலருக்கு கேட்டார் என்று நினைக்கிறேன். அப்படி ஏதோ ஒன்று.

177. அந்த விலைக்கு அதை விற்கக் கூடாது என்று கருதிய ஒருவர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர் சென்று வயலினைக் கையிலெடுத்து, அதை இசைக்கும் 'வில்லை' (bow) கையிலெடுத்து அதற்கு 'ரோசின்' தேய்த்து, ஒரு ராகத்தை வாசித்தார். அவர் வாசித்த போது, எல்லோ ரும் அழ ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு இன்னிசையை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் கேட்டதேயில்லை.

ஏலம் விடுபவன், “இப்பொழுது என்ன விலை தருகிறீர்கள்” என்று கேட்டான்.

“இரண்டாயிரம்'', ”ஐயாயிரம்'', ''பத்தாயிரம்.'' பாருங்கள்? அது என்ன? நிபுணனின் கை அந்த பழைய வாத்தியத்தில் என்ன மறைந்திருந்தது என்பதை வெளிப்படுத்தினது.

இப்பொழுதும் அப்படியே! பழைய புஸ்தகம், அது கிழிக்கப்பட்டு, நகைக்கப்பட்டு, எரிக்கப்பட்டு, கேலி செய்யப்பட்டு வந்தது. அவர்களுடைய ஸ்தாபன ஏலத்திற்கு நேரம் வந்துவிட்டது, உலக சபைகளின் ஆலோசனை சங்கம். அவர்கள் எவ்வித கவலையுமின்றி அதை விற்றுக் கொண்டிருக்கின்றனர் ஸ்தாபன ஏலம் ஒன்று வருகிறது.

178. ஆனால் ஞாபகம் கொள்ளுங்கள், அந்த பழைய புஸ்தகத்திலுள்ள ஒன்று, ஒரு

நாளில் ஒரு முன் குறிக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட கரம் ஒன்று வந்து அதை கையிலெடுத்து, இந்த புஸ்தகத்திலுள்ள வார்த்தையை விவரித்து (முன்குறிக்கப் பட்ட இருதயத்துக்கு, அது உண்டாக்கப் பட்ட பணிக்கு), அதிலுள்ள வாக்குத்தத் தங்களை வெளிப்படுத்தும் என்று வாக் களித்துள்ளது. அது ஒருக்கால், ஓ, பழைய உருளும் பரிசுத்தரின் கூட்டமாக அல்லது அப்படி ஏதோ ஒன்றாக காணப்படும். ஆனால் அந்த வார்த்தையை வெளிப் படுத்த நிபுணரின் கை அவசியமாயுள்ளது. அப்பொழுது அது உருளும் பரிசுத்தரை விட மேலானதாகி விடும். அப்படித்தான் அது நம் ஒவ்வொருவருக்கும் ஆகியுள் ளது, இல்லையா நண்பர்களே? அது மூடபக்தி வைராக்கியத்தின் தொகுப்பு அல்ல. அது யார் கையில் இசைக்கும் வில் உள்ளது என்பதை பொறுத்தது.

ஜெபம் செய்வோம்.

179. எங்கள் பரலோகப் பிதாவே, விசுவாசத்தின் மூலம் நான் அந்த பழைய புஸ்தகத்தின் நிபுணரைக் காண்கிறேன். அவர்கள் அதை பாரம்பரியங்களுக்காக வும், ஸ்தாபனங்களுக்காகவும் பண்டமாற் றம் செய்து, அதை விற்றுப்போட்டார்கள். இப்பொழுது அவர்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட உலக சபை ஆலோசனை சங்கத்திற்காகவும், கம்யூனிஸக் கொள் கைக்காகவும், நாத்திகத்துக்காகவும் அதை விற்றுப்போடப் பார்க்கிறார்கள். கர்த் தாவே, ஏலம் நடந்து கொண்டிருக்கிறது.

தேவனே, அடியெடுத்து வைத்து முன் வாரும்! நிச்சயம் நீர் வருவீர். இசைக்கும் வில்லைக் கையிலெடுத்து, இந்த வார்த் தையை கையிலெடுத்து, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார் என்று நிரூபிக்கும் தீர்க்க தரிசியை எங்களுக்கு அனுப்புவீராக.

கர்த்தாவே, அநேகர் தங்கள் வாழ்க்கையை விற்றுப்போட்டு, தங்கள் பழைய பாரம் பரியங்களை தூர எறிந்து, திரைகளை உடைக்க விரும்புகின்றனர். கர்த்தாவே, அவர்களுக்கு அதுவேண்டும். அவர்கள் எதையும் கொடுக்க ஆயத்தமாயுள்ளனர், அவர்களுக்கு இயேசுவை மாத்திரம் தாரும்.

கர்த்தாவே, அதை நீர் அவர்களுக்கு இப்பொழுது நிரூபித்துவிட்டீர் என்று எண்ணுகிறேன். அவர்கள் எல்லாவிடங் களிலுமிருந்தும் வந்துள்ளனர். அவர்கள் தங்கள் சம்பாதனையை செலவழித்து, எல்லாவற்றையும் செய்து கூட்டத்துக்கு வர முயல்கின்றனர், அவர்களால் முடிந்த எல்லாவற்றையும் அவர்கள் செய்கின்றனர். ஏனெனில் விலை மதிக்க முடியாத அந்த முத்தை அவர்கள் கண்டு கொண்டனர். மற்றவை அனைத்தும் மிகச் சிறியவை களே. பிதாவே, இவர்களை ஆசீர்வதியும்.

180. கர்த்தாவே, இன்று காலை இந்த பிரசங்க பீடத்தின் மேல் உறுமால்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒருக்கால் சிலர் இன்றிரவு சுகமளிக்கும் ஆராதனை நடை பெறுவதற்கு முன்பே போக வேண்டி யிருக்கும். ஓ, நித்திய தேவனே, கீழே நோக்கிப்பாரும். நீர் இங்கிருக்கிறீர் என்று நானறிவேன். நீர் திரைமறைக்கப்பட்டிருக் கிறீர். கர்த்தாவே, ''உறுமால்கள்" என்று அழைக்கப்படுகிற இந்த சிறுதிரைகளை, சிறு ''கச்சைகளை'', குழந்தைகளுக்கு சிறு ”காலுறைகளை'' நான் அனுப்புகிறேன். உமது வார்த்தை இன்று காலை இங்கு பிரசங்கிக்கப்பட்டது என்பதற்கு இந்த சிறு திரை அடையாளங்களை அனுப்புகிறேன். ஒரு விசுவாசி என்னும் ரீதியில் நான் விசுவாசிக்கிறேன் என்பதற்கு அறிகுறியாக என் சரீரத்தின் கைகளை அதன் மேல் வைக்கிறேன். கர்த்தாவே, விசுவாசத்தி னால் இக்கட்டிடத்திலுள்ள ஒவ்வொரு

வரும் அவ்வாறே செய்கின்றனர். வியாதி யஸ்தர் சுகமடைவார்களாக.

181. அந்த வயலின் இசைப்பவர் பழைய வயலினை வாசித்தது போல, கர்த்தாவே, நீர் இங்கிருந்தே வார்த்தையை இசைக்க முடியும். அது சரியான ராகத்தை இசைக்கும்படி செய்யும். நிபுணரின் கையில் வில் இருக்கும்போது, அவர் முழு காட்சியில் நிற்பதை நாங்கள் காண்போம்.

**அந்த நாளிலே அவர்கள் அந்த பழைய வயலினுக்கு ஒன்றுமே கொடுக்க மனதில் லாதபோது, அதை அவர்கள் வேண்டாம் என்ற போது அவர்கள் என்ன நினைத் திருப்பார்கள். அவர்களுக்கு அதை வீட்டிற்கு கொண்டு போகப் பிரியமில்லை. ஆனால் கைதேர்ந்த நிபுணர் அதை கையில் எடுத்த மாத்திரத்தில், அதைக்கொள்ள அவர்கள் எல்லாவற்றையும் விற்றனர். யார் அதைக் கொள்ளவேண்டும் என்பதைக்குறித்து அவர்கள் தர்க்கம் செய்து சண்டையிட்டுக்**

**கொண்டிருந்தார்கள். ஆனால் அதற்குள் காலதாமதமாகிவிட்டது.**

182. **என்றாவது ஒரு நாள் கர்த்தருடைய எக்காளம் முழங்கி இனி காலம் செல்லாது என்னும் போது அப்படித்தான் இருக்கும். ஆனால் பரியாசம் செய்யப்பட்டவர்கள், திறந்த திரைக்கு முன்னால் நின்றுகொண்டு தேவனுடைய வார்த்தை வெளிப்பட்டதைக் கண்டவர்கள். மற்றவர்கள் அதற்காக அலறுவார்கள், ஆனால் நீர் கூறினது போன்று "அப்பொழுது காலதாமதமாயிருக்கும்" அவர்கள் கலியாண விருந்துக்கு சென்றுவிட்டனர். இவர்கள் கைவிடப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.**

பிதாவே, இன்று காலை ஒவ்வொரு நபரும் விசுவாசிக்க உதவி செய்யும். தன்னயம் என்னும் ஒவ்வொரு திரையையும், அவிசுவாசம் என்னும் ஒவ்வொரு திரையையும் உடைத்தெறிந்து, விசுவாசி

களுக்கு முன்னால் வல்லமையுள்ள வெற்றி சிறந்தவர் திரை நீக்கப்பட்டு அவர்கள் காணும்படி செய்யும். ஏனெனில், “இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன். இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண் பீர்கள்.'' கர்த்தாவே, நீர் இதுவரை செய்து வந்தது போல், உம்மை எங்கள் மத்தியில் காண்பித்தருளும். நாங்கள் காணக்கூடிய விதத்தில் உமக்கு முன்னால் இருக்கும் வரைக்கும் அதேவிதமாக நீர் இருந்தரு ளும் - அந்த என் மார்ஃப் மாறி நீர் மறுபடியும் மனுஷ குமாரன் தாவீதின் குமாரனாக ஆகும் வரைக்கும். கர்த்தாவே, இதை இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மூலம் அருளுவீராக.

# ஆனால் ஒன்றை நானறிவேன் - அதாவது அந்த ஏழு இடிகளும் பரலோகம் அமைதியான காரணத்தின் இரகசியத்தை தங்களுக்குள் வைத்துள்ளன



# செய்தி: ஏழாம் முத்திரை, மார்ச் 24, 1963 மாலை

***315.*** *எனக்காகவே மாத்திரம் நான் தேவனிடத்தில் பதில் கூற வேண்டியவ னாயிருக்கிறேன்.*

*இத்தனை வருட காலமும், நான் கர்த்தருடைய நாமத்தில் கூறின ஏதாவ தொன்று சரியாயிராமல் போயிருக்கின் றதா? (சபையார், "இல்லை" என்று கூறு கின்றனர் - ஆசி) அவ்விதம் யாருமே கூறமுடியாது. ஏனெனில் அவர் என் னிடம் கூறின விதமாகவே நான் உங்களுக்கு எடுத்துரைத்திருக்கிறேன்.*

***316.*** *அது உண்மையென்று ஊர்ஜிதப் படுத்த இதைக் காண்பிக்க விரும்பு கிறேன்.*

***317.*** *“உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவ னோடே பேசுவேன்” - சொப்பனத்தின் அர்த்தத்தை விவரித்தல். யோசேப்பு சொப்பனத்தின் அர்த்தத்தை விவரித் தான், தரிசனங்களும் கண்டான். அது உண்மையா? (சபையார், “ஆமென்” என்று கூறுகின்றனர் - ஆசி)*

***318.*** *இதை இப்பொழுது கவனி யுங்கள் - இந்தச் சம்பவம் நிகழ்ந்த போது ஜூனியர் தன் சொப்பனத்தில்*

கூர்நுனிக் கோபுரம் வைக்கப்பட்ட ஒரு வயல்வெளியில் நின்று கொண்டிருந்தார்.

அப்பொழுது பாறைகளில் ஏதோ எழுதப்பட்டிருந்தது.

நான் ஜனங்களுக்கு அது என்ன வென்பதை வெளிப்படுத்திக் கொண் டிருந்தேனாம்.

ஜூனியர், அது சரியா? (சகோதரன் ஜூனியர் ஜாக்சன், "அது உண்மை" என்று கூறுகின்றார் - ஆசி) இது நிகழ் வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு இச் சொப்பனத்தை அவர் கண்டார்.

**319.** இப்பொழுது அடுத்ததைக் கவனியுங்கள். நான் நீண்ட கடப்பாறை போன்ற ஒன்றை எடுத்து அதை வெட்டி னவுடன், அதற்குள் வெண்பாறை ஒன்று இருக்கக் கண்டேனாம்.

அதில் ஒன்றும் எழுதப்படவில்லை.

அப்பொழுது நான் மேற்கு திசையை நோக்கிப் புறப்பட்டேனாம்.

புறப்படும்போது, "நீங்கள் மேற்கு பக்கம் செல்ல வேண்டாம். நான் திரும்பி வரும்வரை இதை பார்த்துக் கொண்டே இருங்கள்" என்று கூறினேனாம்.

அந்த வெடி வெடிப்பதற்காக மேற்குச் சென்று, பரிசுத்த ஆவியைப் பெற்றவனாக கிழக்கு திசை நோக்கி திரும்ப வந்து, எழுதப்படாத வார்த்தைக்கு அர்த்தம் உரைத்தேன்.

இது சர்வ வல்லமையுள்ள தேவனின் பார்வையில் பரிபூரணமாக அமையாவிடில், வேறு எது அமையும்?

*320. நண்பர்களே, நான் எதற்காக இதைக் கூறுகின்றேன்! நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம் என்பதைக் காண்பிக்கவே.*

*மற்றவை தேவனுடைய வார்த்தை யுடன் சரிவர பொருந்தியது போன்று, இதுவும் தேவனுடைய வார்த்தையுடன் முற்றிலும் பொருந்துகின்றது. நாம் இங்கே இருக்கிறோம். நண்பர்களே, நாம் முடிவு காலத்தில் வாழ்கிறோம்.*

*321.* **வெகு விரைவில் "காலம் என்பது கடந்து செல்லும்." இலட்சக் கணக்கானோர் உயிரிழப்பார்கள்.**

**தாங்கள் இரட்சிக்கப்பட்டதாக எண்ணிக் கொண்டிருக்கும் இலட்சக் கணக்கானோர் அணுசக்தியின் காலத் திற்கு தீவனமாவார்கள்** (fodder).

*நாம் கடைசி மணி நேரத்தில் வாழ்ந்து வருகிறோம்.*

*சர்வ வல்லவரின் கிருபையாலும் அவருடைய ஒத்தாசையாலும் அவருடைய ஜனங்கள் கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை எதிர்நோக்கியிருக்கின்றனர்.*

**“இன்னும் எவ்வளவு காலம் உள்ளது சகோதரன் பிரான்ஹாம்?” ஒருக்கால் இருபது வருடம், அல்லது ஐம்பது வருடம், அல்லது நூறு வருடம்கூட செல்லலாம் எனக்குத் தெரியாது. ஒருக்கால் இன்று காலையிலும் அவர் வரக்கூடும். இல்லையேல் இன்றிரவு வரலாம். எனக்குத் தெரியாது. அவர் வரும் நாளை அறிவதாகக் கூறுபவர் தவறு செய்கின்றனர். பாருங்கள்?**

## உண்மையில் அவர்களுக்குத் தெரியாது. தேவன் மாத்திரமே அதை அறிவார்.

*322. இப்பொழுது கவனியுங்கள். தேவனுடைய சமூகத்துக்கு முன்பாக நான் சத்தியத்தை உங்களுக்கு எடுத்துரைத்தேன். அவை யாவையும் பரிசுத்த ஆவியினால் நான் பகுத்தறிந்தேன. அவை ஒவ்வொன்றும் வேதத்தில் தங்கள் தங்கள் இடத்தில் சரியாகப் பொருத்தப்பட்டன.*

*323. ஆனால், இந்த முத்திரையின்கீழ் அடங்கியிருக்கும் அந்த மகத்தான இரகசியம் என்னவென்பது எனக்குத் தெரியாது. அது எனக்குத் தெரியாது. அது என்ன கூறினது என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை.*

ஆனால், நான் பார்த்தது அந்த ஏழு இடிகள் ஒன்றுக்கொன்று அருகாமையில் இருந்து கொண்டு, ஏழு வித்தியாசமான சமயங்களில் முழங்கி, நான் கண்டவற்றை வெளிப்படுத்தினது என்பதை மாத்திரம் நானறிவேன்.

அதை நான் கண்டபோது, அங்கு பறந்து வந்த அதன் அர்த்தத்தை நான் உற்று நோக்கினேன். ஆனால் அது என்னவென்பதை என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை. நான் கூறுவது முற்றிலும் உண்மையாகும். பாருங்கள்? அது வெளிப்படுவதற்கு இன்னும் சமயம் வரவில்லை.

*324.* ஆனால் அந்த சுற்று வட்டத்திற்குள் *(Cycle)* அது வருவதற்கு சமயம் அருகாமையில்தான் உள்ளது. நான் கர்த்தரின் நாமத்தில் இதைக் கூறுகிறேன்

*என்பதை நினைவுகூரவும்.* **எந்த நேரத்தில் என்ன நேரிடும் என்பதை நீங்கள் அறியாதபடியினால், நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.**

***325.*** *இப்பொழுது இது ஒலிநாடாக்களில் பதிவு செய்யப்படுகின்றது. இதை கேட்கும்போது, என் நண்பர்களில் ஆயிரக்கணக்கானவர் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டு, 'சகோ. பிரான்ஹாம் தன்னை தேவனுடைய சமூகத்தில் உயர்த்தி, தீர்க்கதரிசியாகவோ ஊழியக்காரராகவோ தன்னைப் பாவித்துக் கொள்கிறார்' என்று கருதி என்னை விட்டு விலகக்கூடும். நான் உங்களுக்கு இதைச் சொல்லட்டும். என் சகோதரரே, அது தவறாகும்.*

***326.*** *நான் கண்டதையும் எனக்கு அறிவிக்கப்பட்டதையும் மாத்திரமே*

நான் உரைக்கிறேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். செய்யப் போகின்றது யார்... என்ன நடக்குமென்று எனக்குத் தெரியாது.

**ஆனால் ஒன்றை நானறிவேன் - அதாவது அந்த ஏழு இடிகளும் பரலோகம் அமைதியான காரணத்தின் இரகசியத்தை தங்களுக்குள் வைத்துள் ளன.**

எல்லோருக்கும் புரிந்துவிட்டதா? (சபையார் "ஆமென்" என்று கூறுகின் றனர் - ஆசி) அந்த மகத்தான நபர் தோன்ற நாம் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறோமே, அவர் தோன்றும் நேரம் இப்பொழுதாக இருக்கலாம்.

***327.*** ஜனங்களை தேவனுடைய வார்த்தைக்குத் திருப்ப முயன்ற என்னுடைய ஊழியம் ஒருக்கால் அதற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கும். அப்படியானால், நான் உங்களை விட்டு ஒரேயடியாகச் செல்ல நேரிடும். ஒரே சமயத்தில் நாங்கள் இருவர் இருக்க முடியாது. பாருங்கள்? அப்படி இருக்க நேர்ந்தால், அவர் பெருக வேண்டும், நான் சிறுக வேண்டும். எனக்குத் தெரியாது.

***328.*** ஆனால் அந்த இரகசியம் அது என்னவென்றும், அதுவரை அது வெளிப்படுவதை நான் கண்ணாரக் காணவும் தேவன் எனக்கு சிலாக்கியம் அளித்தார். இப்பொழுது, அது சத்தியமாகும்.

உலகத்திலேயே இந்த நாட்கள் தான்
மகத்துவமான நாட்களாக இருக்கிறது.
வேறு எந்த ஒரு காலமும் இந்த
காலத்துக்கு ஈடாகாது



# செய்தி: சத்திய ஆவி, 63-0118 - Spirit Of Truth

***41.*** *அப்படியாக அவர் செய்த காரியங்களை நான் கண்டதை நேரம் எடுத்து எழுதுவேனானால் அது புத்தகங்களின் அநேக தொகுதிகளாகும்.*

*மேலும், அதை யோசிக்கும் போது, எனக்கு இப்பொழுது ஐம்பத்தி மூன்று வயதாகிறது. என்னாலே தேவனுக்கு முன்னால், அவர் சபைக்கு முன்னால், இந்த வேதத்துக்கு முன்னால், அவருடைய கூட்டத்துக்கு முன்னால் ஒருபோதும் அவர் வார்த்தை தோல்வி அடைந்ததை நான் கண்டதில்லை என்று சொல்*

லுவேன். எப்பொழுதும் கச்சிதமாக குறித்த நேரத்தில் நிறைவேறும்.

*42.* எடுத்துக்காட்டாக அன்றொரு நாள் நான் மேற்கு நோக்கி வந்தபோது, அநேகர் அந்த ஒலிநாடாவைப் போட்டு கேட்டிருக்கிறீர்கள். மற்றும் அதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நான் இங்கு எதற்காக காத்து கொண்டு இருக்கிறேன் என்று எனக்குத் தெரிய வில்லை. ஏன் நான் காத்து கொண் டிருக்கிறேன்.

*43.* ஒரு வேளை நான் என் வீட் டுக்கு போவதற்கான நேரமாய் இருக் குமோ.

அது அப்படியாக இருப்பதாக எனக்கு தோன்றுகிறது.

அது அப்படியாக இருந்தால் எனக்கு பிறகு, வேறு ஒருவர் எழும்புவார்.

மற்றும் அந்த செய்தியை முன் கொண்டு போவார், அவர் வினோத மான நபராய் இருப்பார்.

ஆனால் இதற்கு பிறகு எழும்பி, செய்தியை எடுத்துக் கொண்டு செல்வார்.

நீங்கள் அதற்கு செவி கொடுங்கள்.

அது வேத வசனமாய் இருக்கையில் அதோடே தரித்திருங்கள்.

44. அது அப்படி இல்லை என்றால், வேறு ஒரு பகுதி வருகிறது. ஏனெனில் நாம் கடைசிக் காலத்தில் ஜீவிக்கிறோம்,

இந்த நாட்களில் ஜீவித்ததற்கு நான் நன்றியுள்ளவனாய் இருக்கிறேன். ஏனெனில், வேறு ஒரு நாட்களில் ஜீவிக்க நான் இந்த நாட்களை பரிமாற்றம் பண்ண மாட்டேன். உலகத்திலேயே இந்த நாட்கள் தான் மகத்துவமான நாட்களாக இருக்கிறது. வேறு எந்த ஒரு காலமும் இந்த காலத்துக்கு ஈடாகாது.

45. ஓ, 'அப்படியாக மோசே, எலியா, பவுல், சீலா, மற்றும் கடந்து போன நாட்களில் இருந்த அந்த மகத்தான விசுவாச வீரர்கள் எழும்புவார்கள் என்றால், மேலும் அவர்கள் சரித்திரத்து புத்தகத்தை எடுத்து அவர்கள் தீர்க்க தரிசனம் செய்தது நிறைவேறுவதைக் காண்பார்கள் என்றால், மற்றும் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று

காண்பார்கள் என்றால், ஒரு மணி நேரத்துக்குள் அவர்கள் சிறைச்சாலையில் போடப்படுவார்கள். ஒரு மணி நேரத் துக்குள் நிச்சயமாக, ஏனெனில் நேரம் சமீபித்து இருக்கிறது என்று அவர்கள் காட்டுவாசிகளைப் போல் வீதியில் எல்லா இடத்திலும் சுவிசேஷத்தை கடினமாக பிரசிங்கிப்பார்கள்" இப்பொ ழுது இந்த இரவில் நாம் தேவ மகிமைக்கு மிகக் குறைவாக உள்ளோம் என்பதைக் காண்போம்.

**46.** நான் இப்படியாக பயிற்சி செய்வேன். சபையை அணுகும் முன்...

# It's the great things that'll happen with the people in the little minority



Rev. William Marrion Branham

## செய்தி: 61-0208 — Sirs, We Would See Jesus

19 Last night I was talking on the subject of *Expectations*, and tonight, I was going to pray for the sick. Now, in the coming part, next, tomorrow night beginning, we want to start on the evangelistic type of Message, maybe *The Coming Of The Lord, The Mark Of The Beast, The Seal Of God, The Hundred And Forty-four Thousand, The Four Horse Riders Of Revelations*. Why, I believe those messages are what we got to get to

the people, to wake them up, shake them, to show them that we…I seen the great results in *The Seven Church Ages*. I would go through that again, if I thought it would help here. How that the…God did bless it.

20 Now, let me warn the people, again and again: Do not expect the last shake of God in the Church to be a universal thing. It isn't going to be. It's to the Church.

It's the great things that'll happen with the people in the little minority. That's the little group that God shakes to get ready, go. Them are

gone anyhow. See? Now, that's Scriptural and Bible.

21 Not long ago a pastor of a certain great city come to me, and he said, "Well, I'm getting old." Said, "I've been here twenty-some odd years, and we've had some of the most powerful meeting." It's Chicago, it's Mattsson-Boze.

22 He said, "I have longed, Brother Branham, and come here and had a prophecy from the Lord if I'd come here, I would see the mighty hand of God shake this place before time to leave."

23 I said, “Brother Joseph, honestly,” I said, “you are a great theologian, and you’re a great man of…a Doctor of Divinity. There’s no doubt about that. I couldn’t touch it.” But I said, “But my precious brother, you have some poor spiritual discernment.”

24 That’s where the church is missing it today, is that spiritual discernment to see what God is doing. And they look way over the top for something here that’s going on right here, and it’ll be past you before you know it.

Did not Jesus say about John…? The disciples said, “Why does the scribes say that Elias must first come?”

25 He said, “He’s already come and they didn’t know him.” That’s it. They never did know Elijah was a prophet, really, but just the Church. They wouldn’t have treated him, wouldn’t have called him “baldhead,” and carried on like that. They didn’t know it.

26 They didn’t know that John was really truly the prophet of God. They thought he was some crazy man

out there in the wilderness, trying to drown the people in water. But he never did go into the cities and things. He stayed out in the wilderness, odd, peculiar. And they thought he was a fanatic, the way he dressed. But the Church, the called Church, that was called to see that, they recognized right quick that he was a prophet.

27 They didn’t know Jesus was the Son of God until He was dead, and buried, and rose again. Many of them don’t know it yet today. It’s true. They never did know, they…

28 The Catholic church never did accept Saint Patrick. His schools were all in Northern Ireland. He protested the Catholic bishops, and now they make him a saint. Why, the Catholic church burned Joan of Arc, crying at the stake, because they said she was a witch. The girl seen visions. She was a servant of God. About a hundred years later they recognized it, after she was done dead and buried. So they repented, dug up them priests' body that killed her, throwed them in the river.

29 They never know it till it's past, and the Holy Spirit is giving the

Church its last call now, and doing exactly what the Bible said it would do, and the Pentecostal people are groping over the top of it, watching for something. Oh, my. Don't do that, please.

30 Listen. If we're expecting Christ to come…Do you believe that? Well, if we do it, let's act like it. How can we expect Christ to come, and putting six million dollars in a building? How you get these great big things, talking about Christ coming? Why, brother, we ought, be getting, making ready for the Rapture, not for another five-

hundred-year stay here on earth. See?

31 There's something wrong. It just don't jive somehow. It don't—it don't make sense to me. By their fruits…You might say it with your lips, but by your heart. See?

You say, "Oh, yeah, I believe Christ is coming." But your action proves different.

*61-0208 — Sirs, We Would See Jesus*

Rev. William Marrion Branham



# கடைசிகால தீர்க்கதரிசனங்கள்

# 5



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து